# 1 திருவிவிலியம்



படம் 1.1 - திருவிவிலியம்

அக்கா :- தம்பி உலகிலேயே அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள நூல் எதுவென உங்களுக்குத் தெரியுமா?

தம்பி :- ஆமாம்! விவிலியம் தானே!

அக்கா :- அப்படிச் சொல்ல வேண்டாம். விவிலியம் என்பது ஒரு **புனிதமான நூலாகும்.** கிறிஸ்தவர்களாகிய எமக்கு **இது ஆராதனைக்கு உரிய நூலாகும்.** நாம் இதனை **திருவிவிலியம்** என அழைக்கவேண்டும். இதில் **இறைவார்த்தை** உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே இதனை நாம் மரியாதையோடு ஏற்றி வைத்தல் வேண்டும். இரு கைகளையும் பயன்படுத்தி இதனை எடுத்துக் கொடுக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

தம்பி :- அக்கா! இதனை ஏனைய புத்தகங்களோடு புத்தக இராக்கையிலே வைப்பதில்லையா?

அக்கா :- இல்லை தம்பி! வேறு எந்த புத்தகத்தையும் நாம் திரு விவிலியத்தின் மீது வைக்கவும் கூடாது. வேறு ஓரிடத்தில் வணக்கத்திற்குரியதாக பூவும் விளக்கும் வைத்து இதனை வைக்க வேண்டும். நாமும் அவ்வாறே செய்வோம்.

தம்பி :- அக்கா! திருவிவிலியம் எவ்வாறு இப்படிப் பெரிய நூலாக வந்தது?

அக்கா :- தம்பி! மீட்பு வரலாறு தொடர்பான தகவல்கள் திருவிவிலியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது ஒரு நூலகம் போன்றதாகும். இதில் 73 நூல்கள் உள்ளன. இதனைப் **பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு** என இரு பெரும் பிரிவுகளாகவும் பிரிக்கலாம்.

தம்பி :- அக்கா! இது பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பிரிவுகளாக உள்ளது ஏன்?

அக்கா :- **பழைய ஏற்பாட்டில்** இயேசு கிறிஸ்துவின் பிறப்புக்கு முற்பட்ட காலம் பற்றிய விவரங்கள் உள்ளன. இயேசு வைப் பற்றியும் ஆரம்ப காலத் திருச்சபை பற்றியும் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது. இறைவன் தம்மை வரலாற்று நிகழ்வுகளாலும் குல முதுவர்கள் (ஆதிபிதாக்கள்) இறைவாக்கினரின் வழியாக வெளிப்படுத்திய விதத் தினையும் பழைய ஏற்பாடு உள்ளடக்கியுள்ளது. பழைய ஏற்பாட்டில் 46 நூல்கள் உள்ளன. இயேசுவின் வழியாக இறை வெளிப்பாடு முழுமை அடைந்த விதத்தினை **புதிய ஏற்பாடு** உள்ளடக்கியுள்ளது. அத்தோடு கிறிஸ்துவால் முழு மனித சந்ததியும் மீட்பு அடைந்த விதத்தினையும் உள்ளடக்கியுள்ளது. 27 நூல்கள் புதிய ஏற்பாட்டில் அடங்குகின்றன. இந்நூல் 1000 இற்கும் அதிகமான காலப்பகுதியில் பல எழுத்தாளர்களின் பங்களிப்பினால் எழுதப்பட்டுள்ளது.

தம்பி :- அப்படியானால் திருவிவிலியம் மிகப் பெறுமதி வாய்ந்த ஒரு நூல் என்பது விளங்குகின்றது.

அக்கா :- ஆம் தம்பி! திருவிவிலியம் கிறிஸ்தவர்களாகிய **எமது வாழ்வின் நம்பிக்கையையும் எதிர்நோக்கையும் அடிப்படையாகக் கொண்டதாகும்.** ஆகவே கிறிஸ்தவர்கள் அனைவரது வீடுகளிலும் திருவிவிலியம் இருத்தல் வேண்டும்.

# திருவிவிலியம்

## பழைய ஏற்பாடு

01. தொடக்க நூல்
02. விடுதலைப் பயணம்
03. லேவியர்
04. எண்ணிக்கை
05. இணைச் சட்டம்
06. யோசுவா
07. நீதித் தலைவர்கள்
08. ரூத்து
09. 1 சாமுவேல்
10. 2 சாமுவேல்
11. 1 அரசர்கள்
12. 2 அரசர்கள்
13. 1 குறிப்பேடு
14. 2 குறிப்பேடு
15. எஸ்ரா
16. நெகேமியா
17. எஸ்தர்
18. யோபு
19. திருப்பாடல்கள்
20. நீதி மொழிகள்
21. சபை உரையாளர்
22. இனிமை மிகு பாடல்
23. எசாயா
24. எரேமியா
25. புலம்பல்
26. எசேக்கியேல்
27. தானியேல்
28. ஓசேயா
29. யோவேல்
30. ஆமோஸ்
31. ஒபதியா
32. யோனா
33. மீக்கா
34. நாகூம்
35. அபக்கூக்கு
36. செப்பனியா
37. ஆகாய்
38. செக்கரியா
39. மலாக்கி
40. தோபித்து
41. யூதித்து
42. சாலமோனின் ஞானம்
43. சீராக்கின் ஞானம்
44. பாரூக்கு
45. மக்கபேயர் 1
46. மக்கபேயர் 2

## புதிய ஏற்பாடு

01. மத்தேயு நற்செய்தி
02. மாற்கு நற்செய்தி
03. லூக்கா நற்செய்தி
04. யோவான் நற்செய்தி
05. திருத்தூதர் பணி
06. உரோமையர்
07. 1 கொரிந்தியர்
08. 2 கொரிந்தியர்
09. கலாத்தியர்
10. எபேசியர்
11. பிலிப்பியர்
12. கொலோசையர்
13. 1 தெசலோனிக்கர்
14. 2 தெசலோனிக்கர்
15. 1 திமொத்தேயு
16. 2 திமொத்தேயு
17. தீத்து
18. பிலமோன்
19. எபிரேயர்
20. யாக்கோபு
21. 1 பேதுரு
22. 2 பேதுரு
23. 1 யோவான்
24. 2 யோவான்
25. 3 யோவான்

## செயற்பாடு

1. திருவிவிலியத்தின் இரண்டு முக்கிய பிரிவுகளின் பெயர்களை எழுதுக.
2. பழைய ஏற்பாட்டிலிருந்து நான்கு நூல்களின் பெயர்களை எழுதுக.
3. புதிய ஏற்பாட்டின் நற்செய்தி நான்கினதும் பெயர்களை எழுதுக.
4. திருவிவிலியத்தில் தொடக்க நூலைப் புரட்டி முதலில் குறிப்பிடப்பட்டுள்ள அறிமுகத்தை வாசிக்கவும்.

## ஒப்படை

- உங்கள் இல்லத்தில் உள்ள திருவிவிலியத்தை மரியாதையாக ஏற்றி வைப்பதற்குப் பொருத்தமான இடத்தினை ஆயத்தம் செய்யவும்.
- குடும்ப செபத்தின்போது நாள்தோறும் திரு விவிலியத்தில் ஒரு பகுதியை வாசித்துத் தியானிக்கப் பழகிக்கொள்ளுங்கள்.



***வாழ்க்கைக்கு........***

*இறைவார்த்தையை எம் உள்ளத்தில் பதிய வைப்போம். அதனைப் பின்பற்றி நடப்போம். ஆராதனை செய்வோம். நாம் இறை வார்த்தையின்படி வாழ்வோம்.*